Sri Lanka Civil Society
FATF Network

இலங்கை சிவில் சமூகம்
நிதி நடவடிக்கை பணிக்குழு வலையமைப்பு

சிவில் சமூகத்தின் மீதான ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை: இது நிதி நடவடிக்கை பணிக்குழுவுடன் (FATF) எவ்வாறு தொடர்புபடுகிறது?

FATF என்றால் என்ன, அது ஏன் முக்கியமானது?

FATF தவறாகப் பயன்படுத்தப்படுவதிலிருந்து சிவில் சமூகச் சூழலை பாதுகாத்தல்

நிறைவேற்றதிகாரம் சட்டங்களை ஆயுதமாக்குதல்

FATF தவறாகப் பயன்படுத்தப்படுவதால் ஏற்படும் பாதிப்புகள்

இப்பொழுதே செயற்படுங்கள்

நிதி நடவடிக்கை பணிக்குழு (FATF) என்றால் என்ன? அது ஏன் முக்கியமானது?

FATF என்றால் என்ன?

- நிதி நடவடிக்கை பணிக்குழு (Financial Action Task Force – FATF) என்பது பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவிகளைத் தடுப்பதற்கான உலகளாவிய கண்காணிப்பு அமைப்பாகும். இத்தகைய சட்டவிரோதச் செயல்பாடுகளைத் தடுப்பதை நோக்கமாகக் கொண்ட சர்வதேச தரநிலைகளை இவ்வமைப்பு வகுக்கின்றது.

ஒரு நாடு FATF தரநிலைகளைப் பின்பற்றி நடப்பது ஏன் முக்கியமானது?

FATF தரநிலைகளைப் பின்பற்றத் தவறினால், ஒரு நாடு சர்வதேச விதிகளுக்கு உட்படாத நாடாகக் கருதப்பட்டு, சாம்பல் பட்டியல் (Grey List) அல்லது கருப்புப் பட்டியல் (Black List) இல் சேர்க்கப்படலாம். இது வெளிநாட்டு முதலீடுகள் குறைவதற்கும், கடனுக்கான வட்டிச் சுமை அதிகரிப்பதற்கும் வழிவகுப்பதுடன், உள்நாட்டு வங்கிகள் சர்வதேச நிதி நிறுவனங்களுடன் கொண்டுள்ள கூட்டு வங்கித் தொடர்புகளை இழப்பதற்கும் வழிவகுக்கும். இதன் விளைவாக, அந்த நாட்டின் பொருளாதாரம் பலவீனமானதாகவும், முதலீடு செய்வதற்குப் பாதுகாப்பற்றதாகவும் கருதப்படும்

FATF இன் பரிந்துரைகள் யாவை?

- FATF பரிந்துரைகள் சட்டவிரோத நிதிப் பரிமாற்றங்களை நாடுகள் தடுப்பதற்கு உதவக்கூடிய ஒரு விரிவான வழிகாட்டுதலை வழங்குகின்றன. இதன் 40 பரிந்துரைகளும் 7 வெவ்வேறான பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன:
  - பணமோசடி தடுப்பு (AML) / பயங்கரவாத நிதியுதவி எதிர்ப்பு (CFT) கொள்கைகள் மற்றும் ஒருங்கிணைப்பு.
  - பணமோசடி மற்றும் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல்.
  - பயங்கரவாத நிதியளிப்பு மற்றும் பேரழிவு விளைவிக்கும் ஆயுதங்களின் பரவலுக்கான நிதியளிப்பு.
  - தடுப்பு நடவடிக்கைகள்.
  - சட்டப்பூர்வமான நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் உண்மையான உரிமையாளர் விபரம்.
  - தகுதிவாய்ந்த அதிகாரிகளின் அதிகாரங்கள், பொறுப்புகள் மற்றும் பிற நிறுவன ரீதியிலான நடவடிக்கைகள்.
  - சர்வதேச ஒத்துழைப்பு.

FATF இன் பரிந்துரை 8 ஏன் முக்கியமானது?

பரிந்துரை 8 என்பது இலாப நோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) பற்றியதாகும். FATF தரநிலைகளைச் செயல்படுத்துவதால் ஏற்படும் எதிர்பாராத விளைவுகளால் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் எதிர்மறையாகப் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிசெய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

- அனைத்து நாடுகளும் FATF இன் வரைவிலக்கணத்திற்குற்பட்ட இலாப நோக்கற்ற நிறுவனங்களை (NPOs) அடையாளங்காண்பதையும், அவற்றுடன் தொடர்புடைய பயங்கரவாத நிதியுதவி மற்றும் பணமோசடி ஆபத்துகளை (Risks) மதிப்பிடுவதையும் FATF கட்டாயமாக்குகிறது.

- நாட்டில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையும் குறிப்பிட்ட இலக்கை நோக்கியதாகவும், சரியான அளவில் அமைந்ததாகவும், உண்மையான ஆபத்தின் அடிப்படையிலானதாகவும் மட்டுமே இருக்க வேண்டும். அவை, சட்டப்பூர்வமாக இயங்கும் அமைப்புகளின் நியாயமான செயல்பாடுகளைத் தேவையற்ற முறையில் தடுக்கவோ அல்லது முடக்கவோ கூடாது.

- பல இலாப நோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) தங்களுக்குள் போதுமான உள்ளக கட்டுப்பாடுகளையும் (Internal controls), ஆபத்துகளைக் குறைக்கும் சுய ஒழுங்குமுறை அளவீடுகளையும் கொண்டிருப்பதனாலும், அல்லது ஏற்கனவே தகுந்த அரசு ஒழுங்குமுறை விதிகளுக்கு உட்பட்டு இயங்குவதனாலும், அவை **குறைந்த ஆபத்துள்ளவை** (Low risk) என்றே FATF குறிப்பிடுகிறது. இத்தகைய சூழ்நிலைகளில், **கூடுதல் நடவடிக்கைகள் எதற்கும்** அவசியமற்றது என்றும் FATF தெளிவாகக் கூறுகிறது.

- இலங்கைச் சூழலை ஆராய்ந்தால், அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகம் (NGO Secretariat) சிவில் சமூக அமைப்புகளின் (CSOs) மீது விதிக்கும் பல நடவடிக்கைகள், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள அமைப்புகள் மற்றும் மனித உரிமைகள் சார்ந்த பணிகளில் ஈடுபடும் அமைப்புகள் மீது திணிக்கப்படும் கட்டுப்பாடுகள், FATF இன் சிறந்த நடைமுறை வழிகாட்டிக்கு (Best practices guide) அமைவாகக் காணப்படவில்லை. ஏனெனில், அரசின் நடவடிக்கைகள் குறிப்பிட்ட **இலக்கை நோக்கியதாகவோ** (Not focused), **ஏற்புடையதான அளவில் அமைந்ததாகவோ** (Disproportionate) **அல்லது உண்மையான ஆபத்தின் அடிப்படையிலானதாகவோ** (Not risk-based) **இல்லை.** மேலும் விபரங்களுக்குக் குறிப்புகள் 2 மற்றும் 4 ஐப் பார்க்கவும்.

FATF அமைப்பானது, நாடுகள் சிவில் சமூக அமைப்புகளை (CSOs/NGOs) எவ்வாறு கையாள வேண்டும் என்று கூறுகிறது?

- FATF இலாப நோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) பயங்கரவாத நிதியுதவி ஆபத்துகளுக்கு ஆளாகக்கூடிய சாத்தியக்கூறுகள் கொண்டவையா என்பதைக் கண்டறிவதற்கு, நாடுகள் முறையான மதிப்பீடுகளை நடத்த வேண்டும் என FATF வலியுறுத்துகிறது.
- இம்மதிப்பீடுகளின் அடிப்படையில், அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களின் (NGOs) மீதும் பொதுப்படையான தடைகளையோ அல்லது கட்டுப்பாடுகளையோ (Blanket restrictions) திணிப்பதற்குப் பதிலாக, கண்டறியப்பட்ட ஆபத்துகளுக்கு ஏற்றவாறு பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட ஒழுங்குமுறை நடவடிக்கைகளை (Tailored regulatory responses) மேற்கொள்ளுமாறு FATF பரிந்துரைக்கிறது.
- சட்டப்பூர்வமாக இயங்கும் இலாப நோக்கற்ற நிறுவனங்களின் (NPOs) செயல்பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடுவதைத் தவிர்ப்பதற்காக, கட்டுப்பாடுகள் அனைத்தும் "இலக்கு நோக்கிய அணுகுமுறை உடையதாகவும் (Targeted), பாதிப்பின் அளவுக்குப் பொருத்தமானதாகவும் (Proportionate) மற்றும் அபாயத்தின் தன்மைக்கு ஏற்ற உணர்திறன் உடையதாகவும் (Risk-sensitive)" இருக்க வேண்டும் என்பதை FATF வலியுறுத்துகிறது.
- இலங்கையில், மத்திய வங்கியின் சுற்றறிக்கைகள் தனிப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களால் (NGOs) ஏற்படக்கூடிய ஆபத்தின் அளவைக் குறித்து எந்தவொரு முறையான மதிப்பீடுகளையும் செய்யாமலேயே, பொதுப்படையான கட்டுப்பாடுகளை (Blanket measures) விதிக்கின்றன. இதனால், இவை FATF இன் "பரிந்துரை 8" ஐ மீறுகின்றன. இது பற்றிய கூடுதல் விபரங்களுக்குக் குறிப்பு 2 ஐப் பார்க்கவும்.

நாடுகள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டிய, FATF இன் சிறந்த நடைமுறைகள் (Best practices) எவை?

- FATF தரநிலைகளின் தவறான பிரயோகத்தினால் ஏற்படும் எதிர்பாராத விளைவுகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கும், பயங்கரவாத நிதியுதவி மற்றும் பணமோசடி ஆபத்துகளைப் புரிந்து கொண்டு அவற்றைக் குறைப்பதற்கும், "அரசுத் துறை, தனியார் துறை மற்றும் இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கு (NPOs) இடையிலான கூட்டுறவு உறவுகள்" மிகவும் முக்கியம் என்பதை FATF மீண்டும் வலியுறுத்துகிறது. **எனவே, FATF தரநிலைகளைச் செயல்படுத்துவதற்கும், ஆபத்துகளை மதிப்பிடுவதற்கும் (Risk assessment) சிவில் சமூகத்துடனான உரையாடல் (Dialogue) இன்றியமையாததாகும்.**
- சிறிய அமைப்புகள் நிதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதை (Financial inclusion) **தன்னிச்சையான மற்றும் பொதுப்படையான கட்டுப்பாடுகள் (Arbitrary and blanket measures) சீர்குலைக்கும்** என்பதை FATF கவனத்தில் கொண்டுள்ளது. இது, இறுதியில் மனித உரிமைகள் சார்ந்த பணிகளிலும் அபிவிருத்திச் செயல்பாடுகளிலும் ஒரு மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும்.
- FATF சுட்டிக்காட்டியுள்ளபடி, **தன்னிச்சையான மற்றும் பொதுப்படையான கட்டுப்பாடுகள்** (Blanket and arbitrary measures) **நிதிப் புழக்கங்களை ரகசியமான, சட்டவிரோதப் பாதைகளுக்குள் (Underground) தள்ளிவிடும்** இது FATF தரநிலைகளின் **நோக்கத்தையே சிதைத்துவிடும். மேலும், இந்நிலை பயங்கரவாத நிதியுதவி மற்றும் பணமோசடி போன்ற ஆபத்துகள் அதிகரிப்பதற்கே வழிவகுக்கும்.**
- வங்கிகளைப் பொறுத்தவரையில், ஓர் இலாப நோக்கற்ற நிறுவனத்தின் (NPO) ஆபத்துகளை மதிப்பிடும் போது, அந்த நிறுவனம் தனது கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகளில் உள்ள ஆபத்துகளைக் கையாள்வதற்காக ஏற்கனவே நடைமுறைப்படுத்தியிருக்கும் ஒழுங்குமுறைத்

தேவைகள் (Regulatory requirements), சுய ஒழுங்குமுறை அல்லது பிற ஆபத்துக் குறைப்பு நடவடிக்கைகள் (Risk mitigation measures) மற்றும் அவசியமான முன்னாய்வு நடைமுறைகளை (Due diligence procedures) வங்கிகள் கருத்தில் கொள்ள வேண்டும் என்று FATF குறிப்பிடுகிறது.

- ஒரு நிறுவனத்தில் எஞ்சியிருக்கக்கூடிய அபாயம் (Residual risk) கண்டறியப்பட்டால் கூட, “முறையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் அந்த ஆபத்தை போதுமான அளவு குறைக்க முடியுமா என்பதை நிதி நிறுவனங்கள் முதலில் மதிப்பிட வேண்டும் இதன் மூலமே சட்டப்பூர்வமான இலாப நோக்கற்ற நிறுவனங்களின் (NPO) செயல்பாடுகள் தொடர்ந்து தங்கு தடையின்றி நடைபெறுவதை உறுதி செய்ய முடியும்” என்று FATF குறிப்பிடுகிறது.

பரஸ்பர மதிப்பீடு (Mutual Evaluation) என்றால் என்ன?

- பணமோசடி மற்றும் பயங்கரவாத நிதியுதவிகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன மற்றும் அவற்றின் செயல்திறன் எந்தளவில் உள்ளது என்பதை மீளாய்வு செய்யும் “பரஸ்பர மதிப்பீடுகளை” (Mutual evaluations) FATF அமைப்பு நடத்துகிறது.
- இவை “இணை மதிப்பாய்வுகள்” (Peer reviews) ஆகும் இதன் போது, வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து மற்றொரு நாட்டை மதிப்பீடு செய்கிறார்கள்.
- பரஸ்பர மதிப்பீட்டு அறிக்கைகள் (Mutual evaluation reports), ஒரு நாட்டின் பணமோசடி தடுப்பு மற்றும் பயங்கரவாத நிதியுதவி எதிர்ப்புத் திட்டங்கள் பற்றிய ஆழமான விளக்கத்தையும் பகுப்பாய்வையும் வழங்குவதோடு, அந்த அமைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான இலக்கு வைக்கப்பட்ட பரிந்துரைகளையும் வழங்குகின்றன.
- ஒரு பரஸ்பர மதிப்பீட்டின் போது, நாட்டின் நிதி அமைப்பை முறைகேடுகளில் இருந்து பாதுகாப்பதற்கான ஒரு பயனுள்ள கட்டமைப்புத் தன்னிடம் உள்ளது என்பதை மதிப்பிடப்படும் நாடு நிரூபிக்க வேண்டும்.
- ஒரு பரஸ்பர மதிப்பீடு நிறைவடைவதற்கு 18 மாதங்கள் வரை ஆகலாம் என்பதுடன், அதனுள் ஒரு நேரடி களவிஜயமும் (On-site visit) உள்ளடங்கும். இந்நடவடிக்கையின் போது, **சிவில் சமூக அமைப்புகள் (CSOs) ஒரு நிழல் அறிக்கையை (Shadow report) சமர்ப்பிக்க முடியும்.**
- இலங்கை தற்போது ஒரு பரஸ்பர மதிப்பீட்டிற்கு உட்பட்டு வருவதுடன், FATF இன் நேரடி களவிஜயம் 2026 அக்டோபர் 26 முதல் நவம்பர் 6 வரை நடைபெறவுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்களை தன்னிச்சையாக ஆபத்தானவை என வகைப்படுத்துதல்.

- தற்போது நடைபெற்று வரும் பரஸ்பர மதிப்பீட்டு செயல்முறையின் ஒரு அங்கமாக, இலங்கை அரசாங்கம் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) சார்ந்த அபாய மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டிருந்தது. ஜனவரி 2026 வெளியிடப்பட்ட இவ்வறிக்கையின் முடிவுகளின்படி, **இலங்கையின் இலாப நோக்கற்ற சேவைத்துறையில்** இயல்பாகவே காணப்படக்கூடிய **ஒட்டுமொத்த பயங்கரவாத நிதியுதவி (TF) ஆபத்தானது "குறைந்தது முதல் நடுத்தரமானது"** (Low to medium) என மதிப்பிடப்பட்டுள்ளது. **எனினும், இதனுடன் ஒப்பிடுகையில் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் அபாய மட்டமானது "நடுத்தரமானது முதல் அதிகமானது" (Medium to high) என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**
- இம்மதிப்பீடானது, பயங்கரவாத நிதியுதவி முறைகேடுகளுடன் தொடர்புடைய எவ்வித சான்றுகளும் இன்மை, இவ்வமைப்புகளின் செயற்பாடுகளை நேரடியாகக் களத்தில் சரிபார்க்கக்கூடிய சாத்தியப்பாடு மற்றும் பயங்கரவாத அச்சுறுத்தல்களிலிருந்து இவை தூர விலகியிருக்கும் தன்மை ஆகிய காரணிகளை முன்னிறுத்தி சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் சுற்றுப்புறத் தூய்மை, மற்றும் தொழில்முனைவோர் மேம்பாடு சார்ந்த அமைப்புகளை குறைந்த ஆபத்துடையவை (Low risk) என வகைப்படுத்துகின்றது.
- இம்மதிப்பீடானது, மனித உரிமைகள் மற்றும் நிவாரண அமைப்புகளை (Human rights and relief organisations) நடுத்தர குறைந்த ஆபத்துடையவை (Medium-low risk) என வகைப்படுத்துகிறது. எனினும், இவ்வாறான அதிகப்படியான அபாய மட்டத்தை (Higher rating) நியாயப்படுத்துவதற்கான எவ்வித சான்றுகளையும் இவ்வறிக்கை வழங்கவில்லை. அத்துடன், இத்தகைய அமைப்புகள் சம்பந்தப்பட்ட பயங்கரவாத நிதியுதவி அல்லது பணமோசடி குற்றச்சாட்டுகளுக்காக தண்டனை விதிக்கப்பட்ட (Convictions) எவ்வித நிகழ்வுகளையும் அது அடையாளம் காட்டவில்லை. மாறாக, இவ்வமைப்புகள் பயங்கரவாத நிதியுதவி நோக்கங்களுக்காக முறைகேடாகப் பயன்படுத்தப்படக்கூடிய சாத்தியக்கூறுகள் (Susceptible to abuse) உள்ளதாகக் குறிப்பிடும் புலனாய்வு அமைப்புகள் மற்றும் பெயரிடப்படாத துறைசார் நிபுணர்களின (Sector experts) கருத்துகளையே இம்மதிப்பீடு பெருமளவில் நம்பியிருக்கிறது.
- இவ்வறிக்கையானது, **மனித உரிமைகள் மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள சில அமைப்புகளை**, குறிப்பாக அதிக ஆபத்துள்ளவையாகக் கருதப்படும் பகுதிகளில் இயங்கும் அமைப்புகளை, **புலனாய்வுப் பிரிவினர்** தொடர்ந்து **கண்காணித்து** வருவதாகக் குறிப்பிடுகின்றது. எனினும், இவ்வமைப்புகளை அடையாளம் காண்பதற்குக் கையாளப்பட்ட புறநிலை அளவுகோல்கள் (Objective criteria) எவையென்பதை அது சுட்டிக்காட்டவில்லை அல்லது இவை அதிகப்படியான ஆபத்தைக் (Elevated risk) கொண்டிருப்பதாகக் கருதுவதற்கான அடிப்படையை விளக்கவும் இல்லை.
- இது, இலாப நோக்கற்ற நிறுவனங்கள் (NPOs) தொடர்பான நிதி நடவடிக்கை பணிக்குழுவின் (FATF) 8ஆவது பரிந்துரைக்கு முரணாக அமைந்துள்ளது. இப்பரிந்துரையானது, நாடுகள் **இலக்கு நோக்கிய, ஏற்புடையதான அளவு அடிப்படையிலான மற்றும் ஆபத்துகளை மையப்படுத்திய நடவடிக்கைகளை** (Focused› proportionate and risk-based measures) மட்டுமே பின்பற்ற வேண்டும் என **திட்டவட்டமாக வலியுறுத்துவதுடன்**, பல இலாப நோக்கற்ற நிறுவனங்கள் இயல்பாகவே குறைந்த ஆபத்துடையவை (Inherently low-risk) என்பதையும் அங்கீகரிக்கின்றது. ஆனால், தற்போதைய அணுகுமுறையானது வெளிநாட்டு நிதியுதவி பெறுவதையே சந்தேகத்திற்குரிய ஒன்றாகக் கருதுவதுடன், வெளிநாட்டு நிதியைப் பெறும் சிவில் சமூக அமைப்புகள் (CSOs) மீது ஒரு **களங்கத்தை** ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கின்றது.

இலங்கையில் சிவில் சமூக தளத்தை பாதுகாத்தல்: FATF–ஐ ஆயுதமாக்குவதால் சிவில் சமூகத்தில் ஏற்படும் தாக்கம்.

1. இலங்கையில் சிவில் சமூக தளத்தின் நிலை என்ன?

இலங்கையில் சட்டவிரோதப் பணப் பரிமாற்றங்கள் மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுப்பதற்கான (AML/CFT) தற்போதைய சட்டக் கட்டமைப்பானது, சிவில் சமூக தளத்தை கட்டுப்படுத்தும் விதத்திலும், அவர்களின் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தைப் பலவீனப்படுத்தும் விதத்திலும் அதிகமான முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன், இது சிவில் சமூக அமைப்புகளை (CSOs) ஒடுக்குமுறை சார்ந்த கண்காணிப்புகள், அச்சுறுத்தல்கள் மற்றும் திட்டமிட்ட துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்குவதற்கும் கையாளப்படுகின்றது.

நிதி நடவடிக்கைப்பணிக்குழுவின் (FATF) தரநிலைகளுக்கு இணங்குவதற்கே இந்நடவடிக்கைகள் அவசியமானவை என இலங்கை அரசாங்கம் வாதிட்டபோதிலும், தற்போதைய பல நடைமுறைகள் FATF-இன் அடிப்படை கோட்பாடுகளுடன் முரண்படுகின்றன என்பதை ஆதாரங்கள் நிரூபிக்கின்றன. அதாவது, இந்நடவடிக்கைகள் **“இலக்கு நிர்ணயிக்கப்பட்டதாகவும், ஏற்புடையதான அளவிலானதாகவும் மற்றும் அபாய அடிப்படையிலானதாகவும்”** இருக்க வேண்டும் என்ற FATF-இன் நிபந்தனைக்கே இவை முரணாக அமைந்துள்ளன.

குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள சிவில் சமூக அமைப்புகள் (CSOs), தங்களின் செயல்பாடுகளைச் சீர்குலைத்து, கட்டுப்படுத்தும் வகையிலான மற்றும் நிதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதைத் தடுக்கும் வகையிலான தீவிரமான கண்காணிப்புகள், அச்சுறுத்தல்கள், திட்டமிட்ட துன்புறுத்தல்கள் மற்றும் அரச அடக்குமுறைகளை எதிர்கொள்கின்றன. இவ்வமைப்புகள்:

- **விசாரணைகளுக்காகப் பயங்கரவாத விசாரணைப் பிரிவிற்கு (TID) அழைக்கப்படுகின்றனர் / அழைக்கப்பட்டு வருகின்றனர்.**
- **சிவில் உடையணிந்த உத்தியோகத்தர்கள் சிவில் சமூக அமைப்புகளின் (CSOs) அலுவலகங்களுக்கு வருகை தந்து, அவர்களின் பணியாளர்கள், திட்டங்கள் போன்ற விபரங்களைக் கட்டாயமாகக் கோரிப் பெறுகின்றனர்.**
- **சிவில் சமூக அமைப்புகளும், அதேபோன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்களின் வலையமைப்புகளும், தங்களின் நிகழ்வுகள் மற்றும் திட்டமிடப்பட்ட போராட்டங்கள் குறித்த விபரங்களைக் கோரும் தொலைபேசி அழைப்புகளைப் பாதுகாப்புப் பிரிவினரிடமிருந்து பெற்று வருகின்றனர்.**
- **நாடு முழுவதிலும் உள்ள சிவில் சமூக அமைப்புகள் (CSOs) வங்கிக் கணக்குகளைத் திறப்பதிலும் வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதிலும் சவால்களை எதிர்கொள்கின்றன. இச்சவாலானது வங்கிக்கு வங்கி மாத்திரமன்றி, ஒரே வங்கியின் கிளைகளுக்கு இடையிலும் கூட வேறுபடுகின்றது.**



2. இலங்கையின் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் நடைமுறைகள் FATF தரநிலைகளுக்கு இணங்குகின்றனவா?

இல்லை. இலங்கையின் குறிப்பிட்ட **சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் நடைமுறைகள் FATF தரநிலைகளுக்கு இணங்குவதில்லை.** இது, குறிப்பிட்ட சில FATF பரிந்துரைகளை இலங்கை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பின்பற்றத் தவறியுள்ளது (non-compliant or partially compliant) எனக் கருதப்படும் அபாயத்திற்குள் இலங்கையைத் தள்ளுகின்றது.

அரசாங்கத்தின் பல நடவடிக்கைகள், இலாப நோக்கற்ற அமைப்புகள் (NPOs) தொடர்பான FATF-இன் 8ஆவது பரிந்துரையை (Recommendation 8) மீறும் வகையில் அமைந்துள்ளன. இப்பரிந்துரையானது, நாடுகள் "**இலக்கு நிர்ணயிக்கப்பட்ட, ஏற்புடையதான அளவிலான மற்றும் அபாயம் அடிப்படையிலான நடவடிக்கைகளை**" மட்டுமே கையாள வேண்டும் எனத் தெளிவாக வலியுறுத்துவதுடன், பல இலாப நோக்கற்ற அமைப்புகள் (NPOs) இயல்பாகவே குறைந்த ஆபத்துள்ளவை (low-risk) என்பதையும் அங்கீகரிக்கின்றது. (FATF பற்றிய கூடுதல் விபரங்களுக்குக் குறிப்பு 1-ஐப் பார்க்கவும்). ஆனால், தற்போதைய அணுகுமுறையானது வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதையே சந்தேகத்திற்குரிய ஒன்றாகக் கருதுவதுடன், வெளிநாட்டு நிதியைப் பெறும் சிவில் சமூக அமைப்புகள் (CSOs) மீது ஒரு களங்கத்தை ஏற்படுத்துவதற்கும் வழிவகுக்கின்றது.

3. FATF தரநிலைகளைப் பின்பற்றாத இலங்கையின் சட்டங்கள், ஒழுங்குமுறைகள் மற்றும் நடைமுறைகள் எவை?

1. **இலங்கையின் உரிமம் பெற்ற அனைத்து வங்கிகளுக்கும், இலங்கை மத்திய வங்கியின் (CBSL) நிதியியல் உளவறிதல் பிரிவினால் (FIU) 2019 மே 23 அன்று வெளியிடப்பட்ட 01/19 ஆம் இலக்கச் சுற்றறிக்கை.**

   - இச்சுற்றறிக்கையானது, 2016ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க நிதியியல் நிறுவனங்கள் வாடிக்கையாளர் தொடர்பிலான முன்னாய்வு நடவடிக்கைகள் (customer due diligence) விதிகளின் 51ஆவது விதியைக் குறிப்பிடுகின்றது. இச் சுற்றறிக்கையின்படி, தன்னார்வ சமூகச் சேவை அமைப்புகள் (VSSO) சட்டத்தின் கீழ் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தில் (NGO Secretariat) பதிவு செய்யப்படாத ஓர் அரச சார்பற்ற நிறுவனம், வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெறுகின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரம், ஒவ்வொரு நிதியியல் நிறுவனமும் அவசியமான மேலதிக முன்னாய்வு (Enhanced due diligence) நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகின்றது. பொருத்தமான சந்தர்ப்பங்களில், 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிச் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் (FTRA) 7ஆம் பிரிவின் கீழ், சம்பந்தப்பட்ட நிதி நிறுவனம் அந்த அரச சார்பற்ற நிறுவனம் தொடர்பாக நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு (FIU) அறிக்கை சமர்ப்பிக்கலாம்.
   - நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் (FTRA) 7ஆம் பிரிவானது, ஏதேனும் ஒரு பணப் பரிமாற்றமானது ஏதேனும் ஒரு சட்டவிரோதச் செயல்பாடு அல்லது குற்றவியல் குற்றத்துடன் தொடர்புடையதாக இருக்கலாம் எனச் சந்தேகிக்க நியாயமான காரணங்கள் வங்கிக்கு இருக்கும் பட்சத்தில், அது குறித்து வங்கி மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு (FIU) தகவல் தெரிவிக்க வேண்டும் எனக் குறிப்பிடுகின்றது.
   - நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் (FTRA) 7 (2) (c) பிரிவின்படி, வங்கி நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு (FIU) சமர்ப்பிக்கும் அறிக்கையானது அந்நிறுவனம் எந்த அடிப்படையில் அச்சந்தேகத்தைக் கொண்டுள்ளது என்பதற்கான காரணங்களைக் குறிப்பிட வேண்டும். அதாவது, அச்சந்தேகமானது நியாயமான காரணங்களை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டுமே தவிர, அது அற்பமானதாகவோ, போலியானதாகவோ அல்லது தன்னிச்சையானதாகவோ இருக்க முடியாது.

- 01/2019 ஆம் இலக்கச் சுற்றறிக்கையானது, ஒரு சிவில் சமூக அமைப்பு (CSO) அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தில் (NGO Secretariat) பதிவு செய்யப்படவில்லை என்பதற்காக, அதன் கணக்கில் வெளிநாட்டிலிருந்து பெறப்படும் நிதியை வைப்பிலிடுவதை (Credit) வங்கி நிராகரிக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கவில்லை. மாறாக, அது வங்கிகள் அவசியமான முன்னாய்வு (Enhanced due diligence) நடவடிக்கைகளை முன்னெடுப்பதை மட்டுமே கோருகின்றது.

- அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தில் (NGO Secretariat) பதிவு செய்யப்படாத ஓர் அரச சார்பற்ற நிறுவனம் (NGO) பெற்றுக்கொண்ட நிதியானது, ஒரு குற்றவியல் குற்றத்தைப் புரிவதற்குப் பயன்படுத்தப்படலாம் என நியாயமான சந்தேகம் எழும் சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட வங்கி அது குறித்த எழுத்துப்பூர்வமான அறிக்கை ஒன்றை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு (FIU) சமர்ப்பிக்க வேண்டும்.

- ஒரு சிவில் சமூக அமைப்பானது (CSO) அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தில் (NGO Secretariat) பதிவு செய்யப்படவில்லை என்ற ஒரே காரணத்திற்காக, அதற்கான வெளிநாட்டு நிதியை வைப்பிலுடுவதை (Remit) வங்கிகள் நிராகரிக்க வேண்டும் என வலியுறுத்தும் எந்தவொரு சட்டமோ அல்லது ஒழுங்குமுறையோ இன்றுவரை நடைமுறையில் இல்லை.

- இருப்பினும் நடைமுறையில், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தில் (NGO Secretariat) பதிவு செய்யப்படாத அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) பெற்றுக்கொள்ளும் வெளிநாட்டு நிதியை தங்களின் கணக்குகளில் வைப்பிலிடுவதை (Credit) வங்கிகள் நிராகரித்து வருகின்றன. அத்துடன், தங்களது கணக்குகளுக்கு வெளிநாட்டு நிதி வரவு வைக்கப்பட வேண்டுமாயின், அவர்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தில் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும் என்றும் வங்கிகள் வற்புறுத்தி வருகின்றன.

- அதேவேளையில், சிவில் சமூக அமைப்புகள் பெற்றுக்கொள்ளும் நிதியானது பயங்கரவாதச் செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படக்கூடும் என்பதற்கான எந்தவொரு நியாயமான சந்தேகமும் இல்லாத நிலையிலும் கூட, வங்கிகள் நிதிச் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் (FTRA) 7ஆம் பிரிவின் கீழ் அவ்வமைப்புகள் குறித்த அறிக்கைகளை நிதியியல் உளவறிதல் பிரிவிற்கு (FIU) சமர்ப்பித்து வருகின்றன. இந்தத் தன்னிச்சையான நடவடிக்கையானது, விசாரணைகளுக்காகப் பயங்கரவாத விசாரணைப் பிரிவினால் (TID) சிவில் சமூக அமைப்புகள் (CSOs) அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்படுவதற்கு வழிவகுக்கின்றது.

- இது அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) சுதந்திரமாக செயல்படுவதைத் தடுப்பதுடன், அவர்களால் சேவை வழங்கப்படுகின்ற அடிமட்டச் சமூகங்களையும் பெருமளவில் மோசமாகப் பாதிக்கின்றது.

1. **2024 டிசம்பர் மாதத்தில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தினால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்கள்.**

- 2025 டிசம்பர் 12 அன்று, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தினால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOs) வேறொரு சட்டத்தின் கீழ் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்தாலும் கூட, அவை அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தில் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும் எனப் பணிப்புரை விடுத்துள்ளன.

- ஒரு சிவில் சமூக அமைப்பானது (CSO) பதிவுக்கான விண்ணப்பத்தை சமர்ப்பித்தவுடன், அவ்விண்ணப்பமானது "பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்திற்காக" (Clearance) பாதுகாப்பு அமைச்சுக்கு (MOD) அனுப்பி வைக்கப்படும் என அது குறிப்பிடுகின்றது. பாதுகாப்பு அமைச்சரிடமிருந்து அத்தகைய "பாதுகாப்பு அனுமதி அறிக்கைகளை" அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகம் (NGO Secretariat) பெற்றுக்கொள்ளும் போது, "அவ்வனுமதி அறிக்கைகளில் ஏதேனும் சிக்கல்கள் இருப்பதாக" செயலகம் கண்டறிந்தால், அந்தப் பதிவு விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

- குறிப்பிட்ட அறிவுறுத்தல்களில் **"ஒரு சிக்கல்" (A problem) என்பது வரைவிலக்கணப் படுத்தப்படவில்லை.** மேலும், பாதுகாப்பு அமைச்சு (MOD) அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகம் (NGO Secretariat) எதன் அடிப்படையில் இந்த மதிப்பீட்டை மேற்கொண்டு "ஒரு சிக்கல்" இருப்பதாக ஒரு முடிவுக்கு (Conclusion) வருகின்றன என்பதற்கான எந்தவொரு வரையறுக்கப்பட்ட, புறநிலை அளவுகோல்களும் (Objective criteria) அதில் குறிப்பிடப்படவில்லை.

- பதிவு விண்ணப்பம் நிராகரிக்கப்படும் பட்சத்தில், அதற்கு எதிராக மேல்முறையீடு (Appeal) செய்வதற்கான வழிமுறைகள் எதுவும் அதில் குறிப்பிடப்படவில்லை. மேலும், பதிவு விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதன் பின்னர், சம்பந்தப்பட்ட அமைப்பின் சட்டபூர்வ அந்தஸ்து (Status) என்னவாகும் என்பது குறித்தும், குறிப்பாக அது ஏற்கனவே வேறொரு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு அமைப்பாக இருக்கும் பட்சத்தில் அதன் நிலை என்ன என்பது குறித்தும் எவ்விதக் குறிப்புகளும் அதில் இடம்பெறவில்லை.

2. **மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட, 2025 ஏப்ரல் 4 ஆம் திகதியிடப்பட்ட 01/2025 ஆம் இலக்கச் சுற்றறிக்கை.**

- அமைச்சுகளிடமிருந்து பாதுகாப்பு அனுமதி அறிக்கைகளைப் (Clearance reports) பெற்றுக்கொள்வதற்கு நீண்ட காலம் எடுக்கக்கூடும் என்பதால், "அரச சார்பற்ற நிறுவனமாகப் பதிவு செய்வதற்கான தகைமை உறுதிப்படுத்தல் கடிதம்" (Confirmation Letter of Eligibility for Registration as a Non-Governmental Organisation) ஒன்றின் அடிப்படையில் அரச சார்பற்ற நிறுவனங்கள் வங்கிக் கணக்குகளைத் திறக்க முடியும் என இச்சுற்றறிக்கை குறிப்பிடுகின்றது.

- இருப்பினும், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒரு வங்கிக் கணக்கைத் திறப்பதற்கு, தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் சட்டத்தின் (VSSO Act) கீழான பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றோ அல்லது அமைச்சுகளிடமிருந்து பாதுகாப்பு அனுமதியைப் பெற வேண்டும் என்றோ **சட்டத்தில் எந்தவொரு நிபந்தனையும் இல்லை.**

- உதாரணமாக, கம்பனிகள் சட்டத்தின் (Companies Act) கீழ் உத்தரவாதத்தினால் வரையறுக்கப்பட்ட ஒரு (இலாபநோக்கற்ற) கம்பனியாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள ஓர் அரச சார்பற்ற நிறுவனமானது, ஒரு வங்கிக் கணக்கைத் திறப்பதற்காக அதற்குரிய பொருத்தமான ஆவணங்களை வங்கியில் சமர்ப்பிக்க முடியும்.

- இவ்வாறாக, ஓர் உறுதிப்படுத்தல் கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டிய தேவையை உள்ளடக்கியதன் மூலம், இச்சுற்றறிக்கையானது பதிவு செய்வதற்கான சட்டபூர்வத் தேவைகளுக்கும் அப்பாற்பட்ட ஒன்றாக அமைகின்றது.

3. **நிதிச் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் (FTRA), பணமோசடி தடுப்புச் சட்டம் (PMLA) மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுத்தல் பற்றிய சட்டம் (CSTFA) ஆகியவற்றிற்காக 2026 ஜூலை மாத திருத்தங்கள் –** குறிப்பு 3 ஐப் பார்க்கவும்.

குறிப்பு 3

AML/CFT சட்டங்கள் ஊடாக நிறைவேற்றதிகாரங்கள் விரிவாக்கப்படுதல்

நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம் (FTRA), பணமோசடி தடுப்புச் சட்டம் (PMLA) மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுப்பதற்கான உடன்படிக்கைச் சட்டம் (CSTFA) ஆகியவற்றில் 2026 ஜூலை மாதத்தில் கொண்டுவரப்பட்ட திருத்தங்கள், கட்டுப்பாடற்ற நிறைவேற்றதிகாரம் மற்றும் பலவீனமான பாதுகாப்பு வழிமுறைகள் குறித்துக் கடுமையான கரிசனைகளைத் தோற்றுவித்துள்ளன.

இம்மூன்று சட்டங்களையும் ஒன்றாக ஆராயும் போது, அவை ஒன்றோடொன்று இணைந்து இயங்குவதற்கே உத்தேசிக்கப்பட்டுள்ளன என்பதுடன், இது ஒரு தொடர்விளைவை ஏற்படுத்தக்கூடும். இச்சட்டக் கட்டமைப்புகளின் கூட்டுச் செயல்பாடானது, ஒன்றுடன் ஒன்றுடன் மேலெழும் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் குற்றவியல் விளைவுகளுக்கு வழிவகுக்கலாம். இதன் விளைவாக, போதிய பாதுகாப்பு வழிமுறைகள் இல்லாத பட்சத்தில், தனிநபர்கள் மற்றும் அமைப்புகள் மீதான தாக்கங்கள் பல மடங்காக அதிகரிப்பதோடு, உரிமைகளில் ஏற்புடையதல்லாத தலையீடுகளுக்கும் இட்டுச்செல்லும்.

1. நிதியியல் கொடுக்கல்வாங்கல்கள் அறிக்கையிடல் (திருத்தச்) சட்டம் (FTRA)

- இத்திருத்தச் சட்டம் , நிதி உளவறிதல் பிரிவின் (FIU) தலைவருக்கு மிகப் பரந்த அளவிலான விதிமுறை உருவாக்கும் அதிகாரங்களை வழங்குகிறது. இதில், பாராளுமன்றத்தின் மேற்பார்வை இல்லாமல், சட்டபூர்வமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய கட்டாய உத்தரவுகள் (binding directions), சுற்றறிக்கைகள் (circulars), மற்றும் வழிகாட்டுதல்கள் (guidelines) வெளியிடும் அதிகாரமும் அடங்கும். இதன் மூலம், நடைமுறையில் நிதி உளவறிதல் பிரிவிற்கு (FIU) சட்டம் உருவாக்கும் அதிகாரம் வழங்கப்படுவது போன்ற நிலை உருவாகிறது. இது குறிப்பாக இலாப நோக்கமற்ற அமைப்புகள் (NPOs) குறித்து கவலைக்குரியதாகும். ஏனெனில், தெளிவாக வரையறுக்கப்படாத மற்றும் பரந்த கட்டுப்பாட்டு தேவைகள் சட்டத்தின் மூலம் அல்லாமல் நிர்வாக நடவடிக்கைகள் மூலம் விதிக்கப்படலாம். இதனால், தன்னிச்சையான (arbitrary) மற்றும் அடக்குமுறை தன்மை கொண்ட (repressive) இணக்கப்பாட்டு (compliance) கடமைகள் NPO-களின் மீது சுமத்தப்படும் அபாயம் உள்ளது.
- ஒரு நபரினதோ அல்லது அமைப்பினதோ நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை நிதியியல் உளவறிதல் பிரிவு (FIU) தற்காலிகமாக முடக்கிவைக்கக்கூடிய கால எல்லையை, இச்சட்டமூலம் ஏழு நாட்களிலிருந்து பதினான்கு வேலைநாட்கள் வரை (ஏறத்தாழ மூன்று வாரங்கள்) வரை நீடிக்கின்றது. வழக்காளி சார்பான ஒரு தரப்பு விளக்கம் (உயர் நீதிமன்றத்தில் நடத்தப்படும் ஒருதரப்பு விசாரணை நடைமுறை) (Ex parte High Court procedures) மற்றும் மூடிய நீதிமன்ற விசாரணை (In-camera hearings) முறைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. இச்செயல்முறை, உரிய சட்ட நடைமுறைகள் (Due process) மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியன குறித்துக் கடுமையான கவலைகளை எழுப்புவதோடு, நிதிசார் கொடுக்கல்வாங்கல்கள் மீது தன்னிச்சையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் அபாயத்தையும் ஏற்படுத்துகின்றது. இது மக்களின் வாழ்வாதாரங்களையும் வர்த்தகச் செயல்பாடுகளையும் கடுமையாகப் பாதிக்கக்கூடும்.

» தெளிவான புறநிலை அளவுகோல்கள் (Objective criteria), வெளிப்படைத்தன்மை, நடைமுறைசார் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் சுயாதீனமான நீதித்துறை மேற்பார்வை ஆகியன அற்ற நிருவாகக் கட்டமைப்புகள் ஊடாக, கடுமையான தடைகளையும் இணக்கப்பாட்டுக் கடப்பாடுகளையும் திணிப்பதானது, தன்னிச்சையான மற்றும் முரணான அமுலாக்கங்கள் ஏற்படுவதற்கான பாரதுரமான அபாயத்தை உருவாக்குகின்றது.

» இன்னும் வரையறுக்கப்படாத ஒரு குறிப்பிட்ட வரம்பிற்கு மேலான அனைத்துப் பணப் பரிமாற்றங்களையும் வங்கிகள் அறிவிக்க வேண்டும் என இந்தத் திருத்தம் நிபந்தனை விதிக்கின்றது. இது நியாயமான சந்தேகத்தின் அடிப்படையில் அமையாத, ஒரு பொதுப்படையான அறிக்கையிடல் கடப்பாட்டைத் தோற்றுவிப்பதுடன், **சர்வதேச நிதிப் பணிக்குழுவின் (FATF) அபாய அடிப்படையிலான மற்றும் ஏற்புடையதான அளவு அணுகுமுறையிலிருந்து முற்றாக மாறுபடுகின்றது. மேலும், இது நிதி நிறுவனங்கள் மீது கணிசமான நிருவாக சுமைகளையும் சுமத்துகின்றது.**

» சர்வதேச அமைப்புகள் உட்பட ஏனைய தரப்பினருடன் பரந்தளவிலான தகவல் பகிர்வுகளை மேற்கொள்வதற்கு நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு (FIU) இத்திருத்தங்கள் அனுமதியளிக்கின்றன எனினும், தரவுத் தக்கவைப்பு, **இரகசியத் தன்மைவாய்ந்த தகவல்களின் பாதுகாப்பு அல்லது தனிநபர் தரவு நீக்கம் ஆகியன குறித்துப் போதிய பாதுகாப்பு வழிமுறைகளை இது ஸ்தாபிக்கவில்லை.** இது பாரதூரமான தனியுரிமை மற்றும் இணையப் பாதுகாப்பு கரிசனைகளை தோற்றுவிக்கின்றது.

» மத்திய வங்கி ஆளுநரின் தலைமையிலான இத்தேசியக் குழுவிற்கு, **ஒழுங்குமுறை அமைப்புகளுக்கும் ஏனைய தரப்பினருக்கும் கட்டாய உத்தரவுகளைப் பிறப்பிப்பதற்கும்,** விவகாரங்களை அமைச்சரவை மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கும் பரந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனால், தற்போது நடைமுறையில் உள்ள சட்ட மற்றும் நிறுவன ரீதியான பொறுப்புக்கூறல் முறைகள் மீறப்படுவதுடன், அவை வலுவிழந்து போகின்றன.

✣ நிகழ்வுநிலை 1: பணப் பரிமாற்ற நிலையம்

அங்கீகாரம் பெற்ற ஒரு பணப் பரிமாற்ற நிலையம், வெளிநாட்டு நாணயங்களை மாற்ற விரும்பும் வாடிக்கையாளர்களுக்குச் சேவை வழங்குகிறது. இத்திருத்தச் சட்டத்தின் 4ஆவது பிரிவின் கீழ், ஒரு பரிவர்த்தனை நிர்ணயிக்கப்பட்ட வரம்பை (threshold) தாண்டும் போதெல்லாம், அந்த வணிக நிறுவனம் வாடிக்கையாளர் தொடர்பிலான முன்னாய்வு (customer due diligence) நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது கட்டாயமாகும். இருப்பினும், இந்த வரம்பு சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. அதற்குப் பதிலாக, இது நிதியியல் உளவறிதல் பிரிவின் (FIU) தலைவரால் வெளியிடப்படும் எதிர்கால விதிகளின் ஊடாகத் தீர்மானிக்கப்படும்.

அந்த விதிகள் வெளியிடப்படும் வரை, அந்த வரம்பு என்னவென்றும், எந்தெந்த பரிவர்த்தனைகளுக்கு முன்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய கடப்பாடு உள்ளது என்றும் அந்த வணிக நிறுவனத்திற்குத் தெரியாது. எனவே, அது வாடிக்கையாளர் முன்னாய்வு நடவடிக்கைகளுக்காகத் தனது சொந்த வரம்பை நிர்ணயிக்கக்கூடும். எதிர்காலத்தில் நிதியியல் உளவறிதல் பிரிவினால் (FIU) விதிகளின் கீழ் நிர்ணயிக்கப்படும் வரம்பை விட, இந்த வணிக நிறுவனம் நிர்ணயித்த வரம்பு அதிகமாக இருந்தால், சட்டத்தின் புதிய 19(3)(a) பிரிவின் கீழ் அந்தப் பணப் பரிமாற்ற வணிகத்தின் உரிமையாளர் 100 மில்லியன் ரூபா வரையான அபராதத்திற்கு உள்ளாகும் அபாயத்தை எதிர்கொள்கிறார்.

✣ நிகழ்வுநிலை 2: கிராமப்புற நுண்நிதி நிறுவனம்

கிராமப்புறத்திலுள்ள ஒரு சிறிய நுண்நிதி நிறுவனம், பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் சிறு விவசாயிகளுக்கும் சிறிய கடன்களை வழங்குகிறது. இச் சமூக அங்கத்தவர்கள் தேவையான அடையாள ஆவணங்களை கொண்டிருப்பதில்லை. அல்லது வெள்ளம் போன்ற இயற்கை அனர்த்தங்கள் காரணமாக அவர்கள் சில ஆவணங்களை இழந்திருக்கலாம். இந்த வாடிக்கையாளர்கள் பணமோசடி அல்லது பயங்கரவாத நிதியுதவி தொடர்பான குறைந்த ஆபத்தையே கொண்டுள்ளனர் என்பதை அந்த நுண்நிதி நிறுவனம் அறியும்.

இருப்பினும், நிதியியல் உளவறிதல் பிரிவின் (FIU) தலைவரால் வெளியிடப்படவுள்ள விதிகளின்படி மட்டுமே “எளிமைப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் முன்னாய்வு“ (simplified customer due diligence) மேற்கொள்ளப்படுவதை இச்சட்டத் திருத்தம் அனுமதிக்கிறது. அந்த விதிகள் இதுவரை வெளியிடப்படாததால், எந்தச் சூழ்நிலைகளில் எளிமைப்படுத்தப்பட்ட வாடிக்கையாளர் முன்னாய்வு அனுமதிக்கப்படுகிறது என்பது அந்த நுண்நிதி நிறுவனத்திற்குத் தெரியாது. அதீத முன்னெச்சரிக்கையுடன் செயற்படுவதால், முழுமையான முன்னாய்விற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாத குறைந்த வருமானம் கொண்ட வாடிக்கையாளர்களுக்குக் கடன் வழங்குவதை அந்த நிறுவனம் நிராகரிக்கக்கூடும். இது ஏற்கனவே விளிம்புநிலையில் உள்ள மக்களுக்கு நிதியியல் சேவைகளைப் பெறுவதில் கட்டமைப்பு ரீதியான மற்றும் ஒழுங்குமுறையான தடைகளை உருவாக்கி, நிதிச் சுதந்திரத்தைப் பாதித்து, அவர்களை மீண்டும் வறுமையில் தள்ளும்.

மாறாக, வாடிக்கையாளர்களுக்காக அந்த நுண்நிதி நிறுவனம் எளிமைப்படுத்தப்பட்ட முன்னாய்வை மேற்கொண்டாலும், பின்னர் அது நிதியியல் உளவறிதல் பிரிவினால் (FIU) வெளியிடப்பட்ட விதிகளால் அங்கீகரிக்கப்படவில்லை என்று கண்டறியப்பட்டால், அது அதிக நிதி அபராதத்தை எதிர்கொள்ளும் அபாயத்திற்கு உள்ளாகிறது.

✤ நிகழ்வுநிலை 3: சிவில் சமூக அமைப்பு மற்றும் வெளிநாட்டு நிதியுதவி

ஒரு சிவில் சமூக அமைப்பு, குறைந்த வருமானம் கொண்ட சமூகத்தில் ஒரு பாடசாலையை மீளக் கட்டியெழுப்புவதற்காக நன்மதிப்பைப் பெற்ற சர்வதேச நிதிக்கொடையாளர் ஒருவரிடமிருந்து நிதியுதவியைப் பெறுகிறது. இந்த நிதி, ஒப்பந்ததாரர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கும், கல்விச் சேவைகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதற்காகும்.

இச்சட்டத் திருத்தங்களின் கீழ், வெளிநாட்டு கொடையாளரிடமிருந்து நிதி பரிமாற்றம் செய்யப்படும் போது, நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்கு மேலான பரிவர்த்தனைகளை கட்டாயமாக அறிக்கையிட வேண்டிய கடமை வங்கிகளுக்கு உள்ளது. இத்தகைய சட்டக் கடப்பாட்டின் கீழ், குறித்த பரிவர்த்தனைகள் நிதி உளவறிதல் பிரிவினால் (FIU) சந்தேகத்திற்குரியதாக வகைப்படுத்தப்படலாம். குறிப்பாக, இலங்கை அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கான (NPOs) அபாய மதிப்பீட்டில், பயிற்சி மற்றும் கல்வி போன்ற செயற்பாடுகளில் ஈடுபடும் இலாப நோக்கற்ற நிறுவனங்கள் "நடுத்தர" (medium) ஆபத்துள்ளவை என வகைப்படுத்தப்பட்டுள்ளமையால், இத்தகைய நிதிப் பரிமாற்றங்கள் அதிக கவனத்திற்கு உள்ளாகின்றன.

இதன் விளைவாக, நிதிப் பரிவர்த்தனை மதிப்பீடு செய்யப்படும் காலத்தில் நிதிப் பரிமாற்றம் தாமதமடையலாம். இத்தகைய தாமதங்கள் நிதிக்கொடையாளர் நிதியை விடுவிப்பதில் காலதாமதத்தை ஏற்படுத்தி, பாடசாலை கட்டுமானப் பணிகளை முடக்கி, ஒப்பந்ததாரர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் கொடுப்பனவுகளை வழங்குவதில் சிக்கல்களை உண்டாக்கி, இறுதியில் நலிவுற்ற சமூகத்தை சேர்ந்த சிறுவர்களின் கல்விக்கான அணுகலை மோசமாகப் பாதிக்கின்றன.

2. பணமோசடி தடுப்பு (திருத்தச்) சட்டம் (PMLA)

- இந்தத் திருத்தமானது, குறிப்பாக (சொத்துக்களை) முடக்குதல், பறிமுதல் செய்தல் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகள் ஆகியவற்றுடன் தொடர்புடைய விவகாரங்களில், புலனாய்வு மற்றும் அமலாக்க அதிகார சபைகளுக்குப் **பரந்த மற்றும் வழிகாட்டல்களற்ற தன்னிச்சை அதிகாரங்களை வழங்குகின்றது.**
- இச்செயல்முறை போதிய நடைமுறைசார் பாதுகாப்பு வழிமுறைகளைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன், சொத்துரிமை, வாழ்வாதாரம் மற்றும் சட்டபூர்வமான நிதிச் செயல்பாடுகள் ஆகியவற்றில் அதீத முடக்கல் மற்றும் பறிமுதல் அதிகாரங்கள் ஊடாக ஊடுருவக்கூடிய தலையீடுகளைச் செய்ய அனுமதியளிக்கின்றது.
- இத்திருத்தச் சட்டம் "சிறப்பு விசாரணை உத்திகள்", அதனோடு தொடர்புடைய பிற சொத்துக்களை முடக்குதல் மற்றும் "சட்டவிரோதச் செயல்பாடு" என்பதன் விரிவாக்கப்பட்ட வரம்பு ஆகியவற்றைக் கையாள்கிறது. ஆனால், இவற்றுக்கான விதிகள் மிகப்பரந்ததாகவும், தெளிவற்ற தரநிலைகளைக் கொண்டதாகவும் இருப்பதால், இவை தன்னிச்சையாகப் பயன்படுத்தப்படும் அபாயத்தைக் கொண்டுள்ளன.
- இத்திருத்தச் சட்டம் **குற்றம் நிரூபிக்கப்படும் வரை ஒருவர் குற்றமற்றவர் என்ற முன்கணிப்பு (presumption of innocence) மற்றும் தன்னைத்தானே குற்றம் சாட்டிக்கொள்ளாமல் இருப்பதற்கான பாதுகாப்புகள் (protection against self-incrimination)** ஆகியவற்றை பாதிக்கும் வகையிலான விசாரணை முறைகளை உருவாக்குகிறது. கட்டாயப்படுத்தப்பட்ட சத்தியக் கடதாசிகள் (compelled affidavits) மூலம் வாக்குமூலங்களைப் பெறுதல் மற்றும் கூறப்பட்ட முரண்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில் தண்டனைக்குரிய விளைவுகளை (penal consequences) ஏற்படுத்துதல் ஆகியவை இந்த உரிமைகளை பலவீனப்படுத்துகின்றன.
- தேவைப்பாடு, ஏற்புடையதான அளவு, பொறுப்புக்கூறல் அல்லது மேற்பார்வை போன்ற போதிய பாதுகாப்பு வழிமுறைகள் இல்லாமல், வெளிநாட்டு நிறுவனங்களுடன் நிதி மற்றும் தனிநபர் விபரங்களைப் பரந்தளவில் பகிர்ந்து கொள்ள இத்திருத்தச் சட்டம் அனுமதியளிக்கிறது. மேலும், பாராளுமன்ற ஒப்புதலைப் பெறுவதற்கு முன்பே இந்த விதிமுறைகளை நடைமுறைக்குக் கொண்டுவர இது அனுமதிப்பது கவலைக்குரியதாகும். இதன் மூலம், துணைச் சட்டங்கள் (Delegated legislation) மீதான பாராளுமன்றத்தின் கட்டுப்பாடே பலவீனமடைகிறது.

✤ நிகழ்வுநிலை 1: விசாரணையில் உள்ள சிறு வர்த்தக உரிமையாளர்

பெட்டாவில் ஒரு சிறிய பணப் பரிமாற்ற வணிகம் பணமோசடியில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படுகிறது. எந்தவொரு குற்றச்சாட்டும் பதிவு செய்யப்படுவதற்கு முன்பாக, பொலிஸ் அதிகாரி ஒருவர் அந்த உரிமையாளரை பொலிஸ் நிலையத்திற்கு வருமாறும், தனது நிதிப் பரிவர்த்தனைகள் குறித்து சத்தியக் கடதாசி ஒன்றைச் சமர்ப்பிக்குமாறும் கோருகிறார்.

அவ்வுரிமையாளர் சட்டத்தரணி இன்றி, மிகக் குறுகிய கால அறிவிப்பில் பொலிஸ் நிலையத்திற்குச் செல்கிறார். அங்கு அவர் அந்தப் பரிவர்த்தனைகளை நினைவுகூறத் தடுமாறுகிறார். குறைந்த நினைவாற்றலின் அடிப்படையில் அந்தச் சத்தியக் கடதாசியில் கையொப்பமிடுகிறார். தனது துல்லியமற்ற சத்தியக் கடதாசி நீதிமன்றத்தில் சாட்சியமாகப் பயன்படுத்தப்படும் என்பது அவருக்குத் தெரியாது. பல மாதங்களுக்குப் பிறகு, விசாரணை தொடங்கும் போது, அவர் சட்ட ரீதியான பிரதிநிதித்துவத்தைப் பெற்று பரிவர்த்தனைகள் குறித்துக் கூடுதல் துல்லியமான விளக்கத்தை அளிக்கலாம். அவரது முந்தைய சத்தியக் கடதாசிக்கும் புதிய சாட்சியத்திற்கும் இடையில் ஏதேனும் முரண்பாடுகள் இருந்தால், அவர் ஒரு குற்றத்திற்காக வழக்குத் தொடரப்படலாம். ஏனெனில், புதிய சட்டத்தின் 17C(2) பிரிவின் கீழ், முரண்பட்ட அறிக்கைகள் இருப்பதொன்றே அக்குற்றத்திற்கான ஆதாரமாகக் கருதப்படுகிறது.

எனவே, இத்திருத்தச் சட்டம் தனக்கு எதிராகத் தானே சாட்சியமளிக்கக் கூடாது என்ற உரிமை மீறப்படும். அத்துடன், நியாயமான விசாரணைக்கான அடிப்படை உரிமை மற்றும் குற்றமற்றவர் என்ற அனுமானம் (presumption of innocence) போன்ற சட்ட நடைமுறை உத்தரவாதங்களையும் இது ஆபத்துக்குள்ளாக்குகின்றது.



✤ நிகழ்வுநிலை 2: புலனாய்வு ஊடகவியலாளர்

வங்கி ஒன்றில் இடம்பெற்றதாகச் சந்தேகிக்கப்படும் நிதி முறைகேடுகள் குறித்த இரகசிய ஆவணங்களை புலனாய்வு ஊடகவியலாளர் ஒருவர் வெளிக்கொண்டு வருகிறார். பணமோசடி விசாரணை ஒன்றின் போது, அந்த ஊடகவியலாளரின் கணினி மற்றும் கையடக்கத் தொலைபேசியைப் பரிசோதிக்க அனுமதி கோரி, புலனாய்வாளர்கள் ஒரு தரப்பு வாத (ex parte) நீதிமன்ற உத்தரவைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இந்த விண்ணப்பம் ஊடகவியலாளருக்கு அறிவிக்கப்படாமலேயே சமர்ப்பிக்கப்படுவதால், உத்தரவு வழங்கப்படுவதற்கு முன்னதாக ஊடகவியலாளர் தனது ஊடக உரிமைகள், ஊடக சுதந்திரம் அல்லது இரகசியத் தகவல்களை வழங்கியவர்களைப் பாதுகாத்தல் குறித்த கரிசனைகளை முன்வைக்க எந்த வாய்ப்பும் இல்லை. புலனாய்வாளர்கள் தகவல்களை தேடி எடுக்கும்போது , அது அந்தத் தகவலறியும் மூலத்தை அடையாளம் காண வழிவகுப்பதுடன், விசாரணையுடன் தொடர்பில்லாத பிற இரகசியத் தகவல்களையும் வெளிப்படுத்தக்கூடும்.

புதிய 17D(4) பிரிவானது, "பாவிக்கப்படும் விசாரணை நுட்பம் அவசியமானது என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதாக" நீதிபதி திருப்தியடைந்தால் போதுமானது என்று மட்டுமே குறிப்பிடுகிறது. ஒரு கணினி அமைப்பை அணுக அனுமதி வழங்குவதற்கு முன்பாக, இரகசியத் தகவல்களைத் தரும் மூலங்களைப் பாதுகாக்கும் உரிமை போன்ற மூன்றாம் தரப்பினரின் உரிமைகளைக் கருத்தில் கொள்ள வேண்டிய தேவை இதில் இல்லை. மூடிய நீதிமன்ற விசாரணையில் (in-camera) நடைபெறும் இந்த ஒரு ஒரு தரப்பு வாத நடைமுறையானது (ex parte procedure), இத்தகைய கரிசனைகளை முன்வைக்க மிகவும் தகுதியான நபரை அங்கிருந்து வெளியேற்றுகிறது.

தகவல்களை வழங்கும் அந்த மூலமானது சந்தேகத்திற்குரிய வங்கியின் அதிகாரியாக

இருக்கலாம், அவரும் விசாரணையின் கீழ் இருக்கலாம். 17A பிரிவின் கீழ் அவர்கள் சத்தியக் கடதாசி ஒன்றை வழங்க நிர்ப்பந்திக்கப்படலாம், அதில் தன்னைப் பற்றிய தகவல்கள் வெளியே கசிந்துவிடும் என்றோ அல்லது வேலை இழப்பு ஏற்படும் என்ற அச்சத்தாலோ அவர்கள் அனைத்து விவரங்களையும் துல்லியமாக வெளிப்படுத்தாமல் இருந்திருக்கலாம். பல மாதங்களுக்குப் பிறகு, வழக்கு விசாரணையின் போது, சட்ட ஆலோசனையின் பேரில் அவர் முழு உண்மையை வெளிப்படுத்தும் போது, அது முன்னைய சாட்சியத்திற்கு முரணாக அமையலாம்.

பிரிவு 17C(2)-ன் கீழ், குற்றத்தை உறுதிசெய்வதற்கு இந்த முரண்பாடே போதுமானது. இதில் எந்தக் கூற்று தவறானது என நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. இச்சட்டத் திருத்தம் மூன்றாம் தரப்பினரின் உரிமைகள், சட்டரீதியான சலுகைகள் (privileged information) ஊடக சுதந்திரம் ஆகியவற்றின் மீது ஏற்படும் தாக்கங்களைக் கருத்தில் கொள்ளுமாறு நீதிமன்றங்களை வலியுறுத்தாமல், விசாரணை செய்வதற்கான பரந்த அதிகாரங்களை வழங்குகிறது. இது ஊழலை வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் உண்மையான தகவல் வழங்குநர்களை அச்சுறுத்துவதுடன், புலனாய்வு ஊடகவியல் மற்றும் பொதுமக்களுக்கான பொறுப்புக்கூறல் ஆகியவற்றை வலுவிழக்கச் செய்கின்றது.

✣ நிகழ்வுநிலை 3: பொலிஸாரின் நீண்டகால இரகசியக் கண்காணிப்பு

பணமோசடி விசாரணை ஒன்றின் ஒரு பகுதியாக, நிதிக்குற்றத்தில் ஈடுபட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஒருவரின் சமூக வட்டத்திற்குள் ஊடுருவி, அவருடன் தனிப்பட்ட உறவை ஏற்படுத்திக்கொள்வதற்காக இரகசியப் பொலிஸ் அதிகாரி ஒருவரைச் சட்ட அமுலாக்கத் துறையினர் நியமிக்கின்றனர். பல மாதங்களாக, அந்த அதிகாரி குறித்த நபரின் தனிப்பட்ட உறவுகள், உரையாடல்கள் மற்றும் அன்றாட நடவடிக்கைகள் குறித்த விரிவான தனிப்பட்ட விபரங்களைச் சேகரிக்கின்றார்.

சிறப்பு விசாரணை நுட்பங்களைப் பயன்படுத்த இச்சட்டம் அனுமதிக்கும் அதேவேளை, அதற்கு முற்கூட்டிய நீதித்துறை அனுமதியைப் பெறுவதைக் கட்டாயமாக்கவில்லை. இதனால், எந்தவொரு நீதித்துறை அனுமதியும் பெறப்படாமலும், நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்படாமலுமே இவ்விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பல மாதங்களுக்குப் பிறகு, குறித்த நபர் நிதிக் குற்றங்களில் ஈடுபடவில்லை எனத் தெரியவந்தாலும், சேகரிக்கப்பட்ட அவரது தனிப்பட்ட தகவல்களை அழிப்பது தொடர்பான தெளிவான பாதுகாப்பு வழிமுறைகளை இச்சட்டம் வழங்கவில்லை.

எனவே, இச்சட்டம் தனிமனித இரகசியம், பொறுப்புக்கூறல் மற்றும் பாதிப்பு ஏற்பட்டால் அதற்குத் தீர்வு பெறுவதற்கான பயனுள்ள வழிமுறைகள் இல்லாமை தொடர்பில் கரிசனை கொள்கிறது.

3. பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுத்தல் (திருத்தச்) சட்டம் (CSTFA)

- ஒரு பொலிஸ் அதிகாரியினால் பிறப்பிக்கப்படும் (சொத்துக்களை) முடக்கும் உத்தரவுகளின் செல்லுபடியாகும் கால எல்லையை இந்தத் திருத்தம் நீடிக்கிறது. நீதிமன்ற மேற்பார்வை (Judicial oversight) எதுவுமின்றி இவ்வாறு கால எல்லையை நீடிப்பது, FATF அமைப்பினால் பரிந்துரைக்கப்பட்ட மற்றும் பல நாடுகளின் சட்ட அதிகார வரம்புகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட **பாதுகாப்பு வழிமுறைகளை முற்றாக மீறும் வகையில் அமைந்துள்ளது.**

- சொத்துக்களை முடக்கும் உத்தரவை (Freezing Order) உறுதிப்படுத்துவதற்காக, உயர் நீதிமன்றத்தில் ஒருதரப்பு மனு (ex parte application) தாக்கல் செய்ய பொலீஸ் அதிகாரிக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசத்தை இந்தத் திருத்தம் நீட்டிக்கிறது.

- ஒருதரப்பு விசாரணை மனுவானது, நிதிகள் முடக்கப்பட்ட நபரின் **உரிய சட்ட நடைமுறை உரிமைகளைப் பாதிக்கின்றது.** அத்துடன், நீதித்துறை மேற்பார்வையின்றி சொத்து முடக்க உத்தரவுகள் அமுலில் இருக்கும் கால எல்லையை நீட்டிப்பது, **மனித உரிமைத் தரநிலைகளுக்கு முரணானதாகும்.**

- நீதித்துறை மேற்பார்வை (judicial supervision) இல்லாமல் சொத்துகளை நீண்டகாலமாக முடக்கி வைப்பதுஒரு நபர் தனது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நிதி அல்லது வளங்களை அணுக முடியாத நிலையை ஏற்படுத்தினால், **அது மனிதாபிமானமற்ற நடத்தையாக (inhuman treatment) கருதப்படக்கூடும்.**

✚ நிகழ்வுநிலை 1: விசாரணையில் உள்ள தனிநபர்

பயங்கரவாத நிதியுதவி தொடர்பான விசாரணை ஒன்றின் போது ஒருவரது சொத்துக்கள் முடக்கப்படுகின்றன. அந்த நபர் மீது எவ்விதக் குற்றச்சாட்டுகளும் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், பொலிஸாரின் நீண்டகால முடக்க உத்தரவு காரணமாக அவரால் தனது வங்கிக் கணக்குகளையும் நிதிச் சொத்துக்களையும் அணுக முடியாமல் போகிறது. தனது குடும்பத்தின் வாழ்வாதாரத்தை ஈட்டும் அந்த நபர், நிதியை அணுக முடியாததால் அவரது ஒட்டுமொத்த குடும்பமும் பாதிக்கப்படுகிறது.



நிதி அணுகல் இல்லாததால், அந்த குடும்பம் வாடகை, உணவு, பாடசாலைச் செலவுகள் மற்றும் பயன்பாட்டுச் சேவைகள் (utilities) மற்றும் மருந்துப் பொருட்கள் போன்ற பிற அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போராடுகிறது. இச்சட்டத் திருத்தம் சில பரிவர்த்தனைகளுக்காக நீதிமன்றத்தில் விண்ணப்பிக்க அனுமதிக்கின்ற போதிலும், சட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் தனது சொந்தப் பணத்தை அணுக அனுமதி பெறுவதற்குமான பொறுப்பு பாதிக்கப்பட்ட நபர் மீதே விழுகிறது. தங்கள் பணத்தைப் பயன்படுத்த முடியாத சூழலில், அதிக செலவுமிக்க நீதிமன்ற நடவடிக்கைகளையும் சட்ட உதவிகளையும் பெற அவர்கள் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

நீதித்துறை மேற்பார்வை (judicial oversight) இன்றி சொத்துக்களை நீண்டகாலம் முடக்கி வைப்பது, தனிநபர்களையும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களையும் அடிப்படைத் தேவைகளை (உணவு,

மருத்துவம் மற்றும் குழந்தைகளின் கல்வி போன்ற அத்தியாவசியத் தேவைகளைப்) பூர்த்தி செய்ய முடியாமல் செய்து, அவர்களை மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாக்குகிறது. அத்துடன், சொத்து முடக்க உத்தரவுகளை எதிர்த்துப் போராடுவதற்குச் சட்ட ஆலோசனை பெற முடியாத ஒரு நபர், நியாயமான விசாரணைக்கான தடையையும் எதிர்கொள்ள நேரிடுகிறது.

4. அரச சார்பற்ற நிறுவனங்களை (பதிவு செய்தலும் நிர்வகித்தலும்) வரைவுச் சட்டம்

2024 ஆம் ஆண்டில், அப்போது ஆட்சியில் இருந்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் 1980 ஆம் ஆண்டின் தன்னார்வ சமூக சேவை நிறுவனங்கள் (பதிவு மற்றும் நிர்வகித்தல்) சட்டத்திற்குப் பதிலாக, அரச சார்பற்ற நிறுவனங்கள் (பதிவு மற்றும் நிர்வகித்தல்) தொடர்பான புதிய சட்ட வரைவொன்றைச் சிவில் சமூகத்துடன் பகிர்ந்துகொண்டது. எனினும், இச்சட்ட வரைவு சட்டபூர்வமாகச் செயற்படும் சிவில் சமூக அமைப்புகளின் (CSOs) செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கும், அவை ஒன்றுகூடுவதற்குமான சுதந்திரத்தைப் பறிப்பதற்கும் அரசாங்கத்திற்கு அளவுக்கு மீறிய பரந்த அதிகாரங்களை வழங்குவதாகச் சிவில் சமூக அமைப்புகள் விமர்சித்தன. எனினும், அப்போதைய அரசாங்கத்தின் பதவிக்காலத்தில் இச்சட்ட வரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில், அநுர குமார திசாநாயக்க அரசாங்கத்தின் பொதுப் பாதுகாப்பு அமைச்சினால் இதே வரைவு தெரிவுசெய்யப்பட்ட சிவில் சமூக நிறுவனங்களுடன் பகிரப்பட்டது. எனினும் இந்த சட்ட வரைவு சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு முரணாக உள்ளதாகவும், நீதித்துறை மேற்பார்வை இன்றிப் பொலிஸாருக்கும் ஏனைய நிர்வாக அமைப்புகளுக்கும் விரிவான மற்றும் தன்னிச்சையான அதிகாரங்களை வழங்குவதன் மூலம் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை பறிக்கிறது என சிவில் சமூகங்கள் தங்களது விமர்சனங்களைத் தெரிவித்தன.

எவ்வாறாயினும், 2026 ஆம் ஆண்டு ஜுலையில், பணமோசடி தடுப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலைத் தடுத்தல் (AML/CFT) தொடர்பான புதிய பிரிவுகளைச் சேர்த்து, அரசாங்கம் அதே வரைவை மீண்டும் சில தேர்ந்தெடுக்கப்பட்ட சிவில் சமூக அமைப்புகளுடன் பகிர்ந்துகொண்டது. குறிப்பாக, அரச சார்பற்ற நிறுவனங்களைக் கண்காணிப்பதற்கும், பணமோசடியைக் கண்டறிந்து அவற்றின் செயற்பாடுகளை இடைநிறுத்துவதற்கும் இந்த வரைவுச் சட்டத்தில் புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தகுதிவாய்ந்த அதிகாரிக்கு அதிகாரம் வழங்குகின்றன.

ML/FT தொடர்பான விதிகளை உள்ளடக்கியுள்ளமை, சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு முரணான நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கும், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரத்தை கட்டுப்படுத்திச் சிவில் சமூகத் தளத்தைச் சுருக்குவதற்கும் FATF ஐ ஆயுதமயமாக்கும் முந்தைய அரசாங்கங்களின் வியூகத்தை தற்போதைய அரசாங்கமும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கிறது என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் காலத்திலும் சரி, அனுர குமார திசாநாயக்க அரசாங்கத்தின் காலத்திலும் சரி, இந்தச் சட்டத்தை வரைவதற்கான செயல்முறையில் சிவில் சமூக அமைப்புகளுடன் (CSOs) எந்தவிதமான ஆலோசனையும் நடத்தப்படவில்லை.

தேசிய சட்டங்கள் சர்வதேச மனித உரிமைத் தரநிலைகளுடன் ஒத்துப்போகின்றனவா என்பதைப் பரிசீலித்து மீளாய்வு செய்வது இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டரீதியான பொறுப்பாகும். இவ்வாறான நிலையில், மனித உரிமைகளில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய இந்த வரைவு சட்டத்தை உருவாக்கும் போது, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன்கூட எந்தவிதமான ஆலோசனையும் நடத்தப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாகும்.

இந்த வரைவுச் சட்டத்தின் பல பிரிவுகள் FATF இன் பரிந்துரை 8-க்கு (Recommendation 8) முரணானவையாக உள்ளன. உதாரணமாக, இலாப நோக்கற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் அனைத்து நிறுவனங்களும் தகுதிவாய்ந்த அதிகாரியிடம் (Competent Authority) பதிவு செய்வதும், அதன் நிர்வாகத்திற்கு உட்படுவதும் இச்சட்டத்தின் கீழ் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தத்தின் மூலம் நிறுவப்படாத சர்வதேச நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படும் நுண்கடன் நிறுவனங்கள், நம்பிக்கை நிதியங்கள், உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகள் (Guarantee Limited Companies), சங்கங்கள், சபைகள், சமூக விடுதிகள், மன்றங்கள், இயக்கங்கள் மற்றும் பொதுமக்களுக்குச் சேவை செய்வதற்காகவும் தன்னார்வ சமூக சேவை அல்லது இலாப நோக்கற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகவும் ஐந்து அல்லது ஐந்திற்கு மேற்பட்ட நபர்களால் அமைக்கப்பட்ட குழுக்கள் ஆகியவை இத்தகைய நிறுவன வகைகளில் அடங்கும்.

இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யாமை ஒரு குற்றமாகக் கருதப்பட்டுள்ளது. ஆனால், FATF தரநிலைகளின்படி, உண்மையான அபாயங்களின் அடிப்படையிலும், ஏற்புடைய அளவிலும் (Proportionate) குறிப்பிட்ட இலக்கைக் கொண்டதாகவும் (Targeted) மட்டுமே மேற்பார்வை இருக்க வேண்டுமே தவிர, அனைத்து அமைப்புகளுக்கும் பொதுவான கண்மூடித்தனமான அறிக்கையிடல் தேவைகளை அது கோருவதில்லை. அந்த வகையில், இச்சட்ட விதிகள் FATF தரநிலைகளுக்கு முரணானவையாகும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் உத்தரவாதத்தால் வரையறுக்கப்பட்ட கம்பனிகளாகவோ அல்லது அறக்கட்டளைகளாகவோ ஏற்கெனவே பதிவு செய்யப்பட்டிருக்கும் பட்சத்தில், அவைகள் முறையே கம்பனிகள் சட்டம் மற்றும் அறக்கட்டளைகள் கட்டளைச் சட்டம் ஆகியவற்றால் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கையிடல் தேவைகளுக்கு ஏற்கனவே உட்பட்டவை ஆகும். எனவே, அவற்றை அரச சார்பற்ற நிறுவனங்களின் தேசிய செயலகத்தில் (NGO Secretariat) மீண்டும் பதிவு செய்யுமாறு கட்டாயப்படுத்தக் கூடாது. மேலும், NGOக்களை நிர்வகிக்கும் அத்தகைய ஒரு அதிகார அமைப்பு அவசியமென FATF கோருவதும் இல்லை, அவ்வாறான ஒரு விடயத்திற்கு ஒப்புதல் அளிப்பதுமில்லை.

FATF பரிந்துரை 8, FATF வரையறையின் கீழ் வரும் இலாப நோக்கற்ற நிறுவனங்களில் (NPOs) குறிப்பிட்ட பகுதியினர் மட்டுமே பயங்கரவாத நிதியுதவி (TF) துஷ்பிரயோகம் தொடர்பான அதிக ஆபத்தை கொண்டவர்களாக இருக்கலாம் எனக் குறிப்பிடுகிறது. எனினும், முன்மொழியப்பட்ட சட்டம், அனைத்து நிறுனவங்களும் பணமோசடி/பயங்கரவாத நிதியுதவி (ML/TF) அபாயத்தை கொண்டுள்ளன எனக்கருதி தீவிர பாதுகாப்புமயமாக்கப்பட்ட (highly securitised) கட்டமைப்புக்குள் அவற்றைக் கொண்டுவருகிறது.

தகுதிவாய்ந்த அதிகாரத்திற்கு (Competent Authority), ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தின் நிர்வாகக் குழுவின் அனைத்து உறுப்பினர்களினதும் அல்லது பெரும்பான்மையினரதும் எழுத்துபூர்வ கோரிக்கையின் பேரில், அல்லது பதவி வகிப்பாளர்களின் ஒப்புதலின் பேரில், அந்த நிர்வாகக் குழுவின் எந்தவொரு கூட்டத்திலும் கலந்துகொள்ளும் அதிகாரம் உண்டு.

இந்த சட்ட வரைவின் படி, இலாப நோக்கற்ற நிறுவனங்களுக்கு தகுதிவாய்ந்த அதிகாரத்தால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழ் மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும் அதன் பின்னர் அது புதிய விண்ணப்பம் மூலம் புதுப்பிக்கப்பட வேண்டும்.

பதிவு மூன்று ஆண்டுகளுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்பதால், நிறுவனங்கள் நீண்டகால செயற்திட்டங்களைத் தயாரிப்பதில் சிரமம் ஏற்படும். மேலும், நிதி திரட்டல், ஊழியர்களின் வேலைப் பாதுகாப்பு மற்றும் நிறுவனத்தின் தொடர்ச்சியான செயற்பாடு குறித்து நிச்சயமற்ற நிலை உருவாகும்.

மேலும், பதிவு காலாவதியாகும் ஒரு மாதத்திற்கு முன்புதான் பதிவைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க முடியும். அந்த ஒரு மாதத்திற்குள், அதாவது பதிவு காலாவதியாகும் முன்னர், புதுப்பிப்பு செயற்பாடு நிறைவடையாவிட்டால், அதற்குப் பின்னர் நிறுவனம் தொடர்ந்து செயற்பட முடியாது. பதிவு இல்லாமல் செயற்பட்டால் அபராதம் விதிக்கப்படும். எனவே, புதுப்பிப்பு செயற்பாடு பல மாதங்கள் தாமதமானால், அந்தக் காலத்தில் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாமலும், வங்கிக் கணக்கைச் செயற்படுத்த முடியாமலும் போகும். இதனால், நிறுவனத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு, அது நடைமுறையில் செயலற்ற நிலையில் இருக்கும்.

பல மாதங்களுக்குப் பிறகு பதிவு புதுப்பிக்கப்பட்டாலும், நிறுவனம் மீண்டும் ஊழியர்களை நியமிப்பதற்கும் புதிய நிதியைத் திரட்டுவதற்கும் காலம் தேவைப்படும். எனவே, மூன்று ஆண்டுகளுக்கான புதிய பதிவு வழங்கப்பட்டாலும், செயற்திட்டங்களைச் செயற்படுத்த நிறுவனத்திற்கு உண்மையில் கிடைக்கும் காலம் அந்த மூன்று ஆண்டுகளைவிடக் குறைவாக இருக்கும்.

மேலும், பதிவு புதுப்பிக்கப்படாவிட்டால், இலாப நோக்கற்ற நிறுவனத்திடம் மீதமிருக்கும் நிதிக்கொடையாளர் நிதிக்கு என்ன ஆகும்? என்ற முக்கியமான கேள்வியும் எழுகிறது.

முன்மொழியப்பட்ட சட்டத்தின்படி, பதிவு செய்யப்பட்ட எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனமும் நாட்டின் இறையாண்மை அல்லது ஒருமைப்பாட்டிற்கு ஊறு விளைவிற்கும் எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது, அல்லது பொது மக்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களை பாதிக்கும் எந்தவொரு பாதகமான செயலையும் தூண்டவோ அல்லது ஏற்படுத்தவோ கூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவை வரைவிலக்கணப்படுத்தப்படாத சொற்களாகும் இச்சொற்கள், அரசாங்கத்தை விமர்சிக்கும் எந்தவொரு நடவடிக்கையையும், மனித உரிமைப் பணியையும் கூட ஒரு சட்டவிரோத நடவடிக்கையாக முத்திரை குத்துவதற்குப் பரந்த அளவில் பயன்படுத்தக்கூடும்.

முன்மொழியப்பட்ட சட்டம், நீதித்துறை மீளாய்விற்குட்படாத விரிவான, தன்னிச்சையான அதிகாரங்களை தகுதிவாய்ந்த அதிகாரத்திற்கும் பொலிஸாருக்கும் வழங்குகிறது. உதாரணமாக, தகுதிவாய்ந்த அதிகாரமானது, ஒரு பொலிஸ் அதிகாரியுடன் இணைந்து, முன்னறிவிப்புடன் ஆனால் நீதிமன்ற ஆணை இன்றி, எந்தவொரு அரச சார்பற்ற நிறுவனத்தின் வளாகத்திற்குள் நுழைந்து அதன் பதிவேடுகளை அணுகவும் பரிசோதிக்கவும் அதிகாரம் கொண்டுள்ளது. மேலும், இந்த வரைவுச் சட்டம், அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகள், செயற்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை மீளாய்வு செய்யவும், கண்காணிக்கவும், தலையிடவும் தகுதியான அதிகாரத்திற்கு பரந்தளவிலான அதிகாரங்களை வழங்குகிறது, இது ஒன்றுகூடுவதற்கான உரிமை மற்றும் சிவில் தளத்தை பாதுகாத்தல் தொடர்பான சர்வதேச மனித உரிமைத் தர நிர்ணயங்களுக்கு முரணானது. பணமோசடி, பயங்கரவாத நிதியுதவி அல்லது நிதி முறைகேடு தொடர்பான முகத்தோற்ற அளவிலான சான்று (Prima Facie) இருக்கும்போது அல்லது அவற்றின் நடவடிக்கைகளோ அல்லது அவர்களது இருப்போ தேசிய பாதுகாப்பு, நாட்டின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்கு பாதகமான அல்லது அச்சுறுத்தலாக இருக்கும் பட்சத்தில் ஒரு அரச சார்பற்ற நிறுவனத்தின் பதிவை இடை நிறுத்தும் அதிகாரம் தகுதிவாய்ந்த அதிகாரத்திற்கு உள்ளது.

FATF தரநிலைகள் தவறாகப் பயன்படுத்தப்படுவதனால் ஏற்படும் பாதிப்புகள்

சிவில் சமூக அமைப்புகள் நிதி ரீதியாகப் புறக்கணிக்கப்படுதல்

◎ செயற்திட்டங்களின் பயனாளிகள், அனைத்துக் கொடையாளர்கள் அல்லது உள்ளூர் பங்காளர்கள் பற்றிய விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோருவது போன்ற, அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தினால் சிவில் சமூக அமைப்புகள் (CSOs) மீது திணிக்கப்பட்டுள்ள பல நடவடிக்கைகள், சர்வதேச நிதிப் பணிக்குழுவின் (FATF) சிறந்த நடைமுறைகளுக்கான வழிகாட்டிக்கு அமைவாகக் காணப்படவில்லை. ஏனெனில் அவை இலக்கு வைக்கப்பட்டவையாகவோ, அபாய அடிப்படையிலானவையாகவோ அல்லது ஏற்புடையதான அளவுடையதாகவோ அமையவில்லை.

◎ அரசாங்கத்தினால் எடுக்கப்படும் இத்தகைய பொதுப்படையான மற்றும் தன்னிச்சையான நடவடிக்கைகள் (Blanket and arbitrary measures), சிவில் சமூக அமைப்புகளை குறிப்பாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இயங்கும் அமைப்புகளையும், மனித உரிமைப் பிரச்சினைகள் சார்ந்து பணியாற்றும் அமைப்புகளையும் ஒரு அச்சுறுத்தலாகப் பார்க்கும் நிலையைத் தோற்றுவித்துள்ளன.

நிதியியல் உளவறிதல் பிரிவினால் (FIU) வெளியிடப்படும் சுற்றறிக்கைகளை வங்கிகளும் நிதி நிறுவனங்களும் தவறாக விளங்கிச் செயற்படும் விதம் ஒரு முதன்மையான கரிசனையாக உருவெடுத்துள்ளது. அவற்றுள் பின்வருவன அடங்கும்:

» அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தில் (NGO Secretariat) பதிவு செய்யப்படாத அமைப்புகளுக்குக் கிடைக்கும் வெளிநாட்டு நிதிக்கொடைகளை (Foreign grants) அவற்றின் கணக்குகளில் வரவு வைக்க மறுத்தல்.

» கம்பனிகள் சட்டம் (Companies Act) போன்ற பிற சட்டங்களின் கீழ் சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள அமைப்புகளாக இருந்தபோதிலும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தின் பதிவு கட்டாயம் தேவை என வற்புறுத்துதல்.

» பயங்கரவாதத்திற்கு நிதியளித்தல் அல்லது பணமோசடி (போன்ற குற்றங்கள் தொடர்பில் நியாயமான சந்தேகங்கள் ஏதுமற்ற நிலையிலும், சம்பந்தப்பட்ட அமைப்புகள் குறித்து நிதியியல் உளவறிதல் பிரிவுக்கு (FIU) அறிக்கை சமர்ப்பித்தல்.

» வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்றுக்கொண்டார்கள் என்ற ஒரே காரணத்திற்காக, பயங்கரவாத விசாரணைப் பிரிவின் (TID) விசாரணைகளுக்கும் பாதுகாப்பு அமைப்புகளின் (Security agencies) கடுமையான கண்காணிப்புகளுக்கும் வழிவகுத்தல்.

நிதிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வது குறித்து 100 சிவில் சமூக அமைப்புகளிடம் (CSOs) நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பானது (Survey), அவை நிதிப் புறக்கணிப்புக்கு முகம் கொடுப்பதில் உள்ள பாரதுரமான தடைகளை வெளிப்படுத்தியுள்ளது.

- பதிலளித்தவர்களில் 69% சதவீதமானோர் வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கியதாகக் குறிப்பிட்டுள்ளனர். இது அவர்களின் நிகச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் திறனைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தியுள்ளது.
- இத்தகைய சிரமங்களை எதிர்கொண்டவர்களில் 42% சதவீதமான அமைப்புகள், வெளிநாட்டு நிதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு நிபந்தனையாக அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான செயலகத்தில் பதிவு செய்ய வேண்டும் என வங்கிகளால் வற்புறுத்தப்பட்டுள்ளனர். இத்தகையதொரு கோரிக்கைக்கு எவ்வித தெளிவான சட்டபூர்வ அடிப்படைகளும் இல்லாதபோதிலும் இந்நிலை காணப்படுகின்றது.
- இலாபநோக்கற்ற அமைப்புகளில் (NPOs) 50% சதவீதமானவை புதிய வங்கிக் கணக்குகளைத் திறப்பதில் சிரமங்களை எதிர்கொண்டதாக முறைப்பாடு செய்துள்ளன. இது அடிப்படை வங்கிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் உள்ள பரந்த சவால்களைக் காட்டுகின்றது.
- 37% சதவீதமானவை தங்களின் பணப்பரிமாற்றங்களை மேற்கொள்வதற்காக மேலதிக ஆவணங்கள் அல்லது விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளன.
- 32% சதவீதமானவை வங்கிப் பணப்பரிமாற்றங்களை மேற்கொள்ளும் போது காலதாமதங்களை எதிர்கொண்டுள்ளன.
- 22% சதவீதமானவை தங்களின் கணக்குகளிலிருந்து பணத்தை எடுப்பதிலும் அல்லது வைப்புச் செய்வதிலும் சிரமங்களை எதிர்கொண்டன.
- 57% சதவீதமானவை வங்கிச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் அடிக்கடி பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன.
- 17.5% சதவீதமான அமைப்புகள் தொடர்ச்சியான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன.
- 17% சதவீதமான அமைப்புகள் மாத்திரமே எவ்வித பிரச்சினைகளையும் எதிர்கொள்ளவில்லை.

பாதிப்பு

இது உள்ளூர் அமைப்புகளுக்கு, குறிப்பாக கொழும்பிற்கு வெளியேயுள்ள சிறிய அடிமட்ட சமூக அமைப்புகளுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. இக்குழுக்கள் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை ஆதரிப்பதற்கும், உளச்சமூக ஆதரவு, சட்ட உதவி ஆகியவற்றை வழங்குவதற்கும், வாழ்வாதரச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் மற்றும் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கும் சர்வதேச நிதியுதவிகளிலேயே தங்கியுள்ளன. நிதி ஆதாரங்களை அணுகுவதில் ஏற்படும் இத்தகைய சிரமங்கள், நலிவடைந்த சமூகங்களுக்கான சேவை வழங்கல்களைப் பாரதூரமாகப் பாதிக்கின்றன.

- **இலாபநோக்கற்ற அமைப்புகளில் 43% சதவீதமானவை, இத்தகைய விதிமுறைகளுக்கு இணங்குவதற்கான தேவைகளை நிறைவு செய்வதற்காக அதிக நேரத்தை ஒதுக்க நேர்ந்ததாக குறிப்பிட்டுள்ளன. இது அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அதீத நிருவாகச் சுமையை சுட்டிக்காட்டுகின்றது.**
- **இத்தகைய நிபந்தனைகளின் விளைவாக, பதிலளித்தவர்களில் 21% சதவீதமான அமைப்புகள் தங்களின் செயற்திட்டங்களை அல்லது செயல்பாடுகளை ஒத்திவைக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டன.**
- **நிதிச் சேவைகளை அணுகுவதில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளினால் ஏற்பட்ட மிக மோசமான விளைவு என்னவெனில், கொடையாளர்கள் அல்லது திட்டங்களின் காலக்கெடுவுக்கு அமைவாகச் செயற்பட முடியாமல் போனமையாகும். இது பதிலளித்தவர்களில் 45% சதவீதமான அமைப்புகளைப் பாதித்துள்ளது.**
- **37% சதவீதமான அமைப்புகள் தங்களின் ஊழியர்களுக்கான சம்பளங்களை வழங்குவதில் சிரமங்களை எதிர்கொண்டன அல்லது ஊழியர்களை வேலையில் இருந்து நீக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர்.**
- **31.5% சதவீதமான அமைப்புகள் இதனால் தங்களின் நிறுவன நம்பகத்தன்மைப் பாதிப்புக்கு உள்ளானதாக கூறுகின்றனர்.**
- **29% சதவீதமான அமைப்புகள், இத்தகைய சவால்கள் தாங்கள் பணியாற்றும் பயனாளி சமூகங்களுக்கான அத்தியாவசியச் சேவை வழங்கல்களைப் பாதித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளன.**

திட்டமிட்ட காலத்திற்குள் எம்மால் செயற்திட்டங்களை நிறைவு செய்ய முடியாமல் போனது. இதனால் பயனாளிகளுக்குச் சேவைகளை வழங்கும் எமது திறன் மீது கொடையாளர்கள் கொண்டுள்ள நம்பிக்கையை இழக்க நேரிடுகிறது. வாழ்வாதார உதவிகளும் விழிப்புணர்வுத் திட்டங்களும் காலதாமதமடைகின்றன, இது உள்ளூர் சமூகங்களுக்கு மத்தியில் எமக்கிருக்கும் நம்பகத்தன்மையைப் பாதிக்கின்றது.

நிறுவன மற்றும் நிதிசார் கொள்கை ஆவணங்களை மீளமீளச் சமர்ப்பிக்குமாறு கோரியதன் ஊடாக நாம் அலைக்கழிப்புகளை எதிர்கொண்டோம். எமது அமைப்பின் பதிவுச் சான்றிதழை வங்கி ஒவ்வொரு மாதமும் கோரியது. அத்துடன், இந்நிதிகள் மக்களின் நலனுக்காகவே பயன்படுத்தப்படும் என்பதற்கான ஆதாரங்களையும் வங்கி எம்மிடம் கோரியது.

பெரும்பாலான நேரங்களில், மத்திய வங்கியிடமிருந்து வரும் தொடர்ச்சியான மாற்றங்கள் மற்றும் அழுத்தங்கள் காரணமாக வங்கிகளும் கடுமையான சிரமங்களை எதிர்கொள்கின்றன. எனவே, ஆவணக் கோரிக்கைகளைத் தொலைபேசி ஊடாக விடுக்காது, எழுத்துப்பூர்வமான அறிவிப்புகள் உள்ளிட்ட விரிவான தகவல் தொடர்புகளை வழங்குமாறு நாம் அவர்களிடம் கோர வேண்டியுள்ளது.

இலாபநோக்கற்ற அமைப்புகள் (NPOs) மீது விதிக்கப்படும் பொதுப்படையான மற்றும் தன்னிச்சையான கட்டுப்பாடுகள், **நிதிசார் உள்ளடக்கலைப் பலவீனப்படுத்தி, கண்காணிப்பற்ற மறைமுக நிதிப் பரிமாற்றங்களுக்கே வழிவகுக்கும் என்பதை சர்வதேச நிதிப் பணிக்குழு (FATF) அங்கீகரித்துள்ளது. இத்தகைய நடவடிக்கைகள், பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பதைத் தடுப்பதற்கான கூட்டு முயற்சிகளை வலுப்படுத்துவதற்குப் பதிலாக மேலும் பலவீனப்படுத்தவே செய்யும்.**

நீங்கள் எவ்வாறு பங்களிக்க முடியும்?

நீங்கள் இலங்கை சிவில் சமூக FATF வலையமைப்பில் இணைய விரும்பினால், அல்லது FATF மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் மீதான அதன் விளைவுகள் குறித்து மேலதிக தகவல் தேவைப்பட்டால், தயவு செய்து அம்பிகா சற்குணநாதன், மகேஷி ஹேரத், அல்லது மைத்ரேயி ராஜசிங்கம் ஆகியோரை csoslfatfnetwork@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாகத் தொடர்பு கொள்ளவும்.

நீங்கள் இதுபோன்ற சவால்களை எதிர்கொண்டிருந்தால் மற்றும் அவற்றை வலையமைப்புடன் பகிர்ந்து கொள்ளவும், தீர்வுகளை ஆராயவும், பரிந்துரை முயற்சிகளில் ஈடுபடவும் விரும்பினால், தயவு செய்து அம்பிகா சற்குணநாதன், மகேஷி ஹேரத், அல்லது மைத்ரேயி ராஜசிங்கம் ஆகியோரை csoslfatfnetwork@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாகத் தொடர்பு கொள்ளவும்.

இந்த விளக்கக் குறிப்புகளை உங்கள் இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடகத் தளங்களில் பகிரவும்.

இந்த விளக்கக் குறிப்புகளை பிற சிவில் சமூக அமைப்புகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வங்கித்துறை சார்ந்தோருடன் மற்றும் ஊடகங்களுடன் பகிரவும்.

Sri Lanka Civil Society
FATF Network

இலங்கை சிவில் சமூகம்
நிதி நடவடிக்கை பணிக்குழு வலையமைப்பு